யாகத் தகவல் தராமல் அதிகாரிகள் மெத்தனப் போக்கோடு இருந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டது பல மாதங்களுக்கு முன்பாக. கேள்வி கேட்ட உடனே உடனடியாக வேலைகளை அவர்கள் முடிக்கவேண்டுமென்ற முறையிலே முடித்து இருக்கிறார்கள், அதற்காக நன்றி சொல்லவேண்டும், பாராட்டுச் சொல்லவேண்டுமே தவிர நடவடிக்கை எடுப்பது சரியாக இருக்காது. நில ஆர்ஜிதம் காரணமாகத்தான் பாலம் தடைபட்டதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே தமிழ்நாட்டில் 1980 ஆம் ஆண்டு பட்ஜெட் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பாலம் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கும் நிலை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும சம்பந்தமில்லை.

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 91—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் குன்னத்தூரில் புதிய பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி நிதி நிலைக்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவரவர்களே, குன்னத்தூர் கிராமத்திற்கு அருகில் ஆற்றுக்குக் குறுக்கே இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டும் என்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது திருப்பத்தூரில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலைக்கு கரும்புகள் செல்ல வேண்டும், வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் அந்த வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அந்தக் குறுகிய பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கான திட்டத்தைத் தீட்ட முயற்சியெடுத்துக் கொள்ளுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறன். அதை இந்த ஆண்டுக்குள்ளாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இது பாம்பாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம்; பார்த்துத்தான் செய்ய வேண்டும்.